
உ

ஸ்ரீ தங்காள், ஸ்ரீ பெரியக்காண்டி அம்மன் துணை



**கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், நங்கவரம் கிராமம், அனஞ்சனூர்**

## அருள்மிகு ஸ்ரீ தங்காள், ஸ்ரீ பெரியக்காண்டி அம்மன் அண்ணாவியார், மதுரை வீரன், மாசான கருப்பு, காத்தவராயன் சுவாமிகள் திருக்கோயில்

# திருவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீஹேவிளம்பி வருடம் வைகாசி மாதம் **27-ந்** தேதி **(10-06-2017) சனிக்கிழமை** கிருஷ்ணபட்சம் துவிதியை மூலம் நட்சத்திரம் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் இரவு **7-00** மணியளவில் **அனஞ்சனூர் ஸ்ரீ தங்காள், ஸ்ரீ பெரியக்காண்டியம்மன் திருக்கோவிலிலிருந்து** சுவாமிகள் அழைக்கப்பெற்று காவிரி நதி தென்கரை சென்று பச்சை கரகம் பாலித்து மேள தாளத்துடன், வாண வேடிக்கைகளுடன் பெருகமணியிலிருந்து பூஜைகள் வாங்கி பழையூர் வழியாக அனஞ்சனூர் வந்தடைந்து ஊர் பூஜைகள் வாங்கி சூரிய உதயத்திற்கு முன் **அருள்மிகு ஸ்ரீ தங்காள், ஸ்ரீ பெரியக்காண்டியம்மன் சன்னதி** வந்து சேரும்

மறுநாள் வைகாசி மாதம் **28-ந்** தேதி **(11-6-2017)** ஞாயிற்றுக்கிழமை காலை **6-00** மணியளவில் சுவாமிகளுக்கு **சந்தன காப்பு, பூக்கூடாரம் அமைத்து பூஜைகள்** நடைபெறும். அதன்பின் காலை **10-00** மணிக்கு மேல் **11-30** மணிக்குள் குல தெய்வ பங்காளிகளின் குழந்தைகளுக்கு முடி இறக்கி காதணி விழா நடைபெறும். மாலையில் **விடையாத்தி விழா** நடைபெறும்.

மறு நாள் வைகாசி மாதம் **29-ந்** தேதி **(12-6-2017)** திங்கட்கிழமை **மஞ்சள் நீராடி திருவிழா** இனிதே நிறைவடைகிறது. அது சமயம் பக்த கோடிகள் அனைவரும் திருவிழாவிற்கு வந்திருந்து அம்பாள் அருளைப்பெற வேண்டுகிறோம்.

இப்படிக்கு

**ஊர்பொதுமக்கள்,**